# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 11 புதன்கிழமை 25.06.2025 கதிர் 228


இது ரகசியம் அல்ல!

கொள்கைக் குன்றுகள் இப்போது என்ன செய்யப் போகிறார்கள் என்பதப் பார்ப்பதற்கு ஆவலாக இருக்கின்றேன். அவர்களின் கொளைகக் கூட்டாளிகள் முதலில் யாழ்ப்பாணத்திற்கு ☞ 2

# என்பிபி - ஜனநாயகக் கூட்டணிக் கூட்டு மாந்தை மேற்கில் ஆட்சியைப் பிடித்தது

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசசபையின் ஆட்சி அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

மன்னார்மாந்தைமேற்குபிரதேசசபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி தலைமையில் மாந்தை மேற்கு பிரதேச சபையில் நடைபெற்றது. சபையின் 21 உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர ஏனைய 20 பேரும் கலந்துகொண்டிருந்தனர்.

தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டபோது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் பிரேம்குமார் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் கமலச்சந்திரன் ஆகியோரின்பெயர்கள்முன்மொழியப்பட்டன.

தமிழ்அரசுக்கட்சியின் கமலச்சந்திரனுக்கு ஆதரவாக 5 வாக்குகளும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் பிரேம்குமாருக்கு ஆதரவாக 15 வாக்குகளும் கிடைத்தன. இதனடிப்படையில் பிரேம்குமார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, தொழிலாளர் கட்சி ஆகியவை ஆதரவு வழங்கின. மேலும் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றபோது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிஸாம் நிஜாத் போட்டியின்றி உப தவிசாளராகத் ☞ 2

## கைகளில் காணி உறுதியோடு மயிலிட்டி மக்கள் போராட்டம்

4ஆவது நாளாகவும் ஆளும்தரப்பு பாராமுகம்





யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்க கோரி நேற்று நான்காம் நாளாக காணி உறுதிகளுடன் உரிமையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்

காணிகளை விடுவிக்க கோரி ☞ 3

## என்பிபி – ஜனநாயகக் கூட்டணி கூட்டு மக்கள் ஆணையை மீறிய கொடூரம்

### தமிழ் அரசுக் கட்சி தலைவர் கடும் கண்டனம்

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் (என்பிபி) இணைந்து ஆட்சியமைத்திருப்பது உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு முற்றிலும் முரணான கொடூரம். இதனைக் கண்டிக்கின்றோம் என்று தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் தலைவர் சிவஞானம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் தெரிவில் எங்களுக்குள் வேறுபாடுகள் இருந்த போதிலும் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் உள்ள எந்தவொரு சபையிலும் ஆட்சி அமைப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்பதில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தொடக்கம் முதலே ஒரு இறுக்கமான கொள்கை கோட்பாடாகக் கடைபிடித்து வந்திருக்கின்றன.

இந்தக் கோட்பாட்டை தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கு முழுவதும் எந்தப் பிசிறுமின்றிப் பின்பற்றி வந்திருக்கின்றது. இதுநாள் வரையில் ஏனைய தமிழ்க் ☞ 2

## போர் முடிந்தும் நிலத்தை பிடித்திருப்பது தமிழின அழிப்பின் மற்றொரு வடிவம்

### மயிலிட்டி போராட்டத்தின் 4ஆம் நாளில் அருட்தந்தை உரை

போர் முடிந்தும் மக்களின் காணிகளை விடுவிக்காது இருப்பது இன அழிப்பின் மற்றுமொருவடிவமேயாகும். இதனால்தான் ஆளும்தரப்பும் இராணுவமும் காணிகளை விடுவிக்காது இழுத்தடிப்பு செய்துவருகிறன என அருட்தந்தை லியோஆம்ரோங் தெரிவித்தார்.

‘எமது நிலம் எமக்கு வேணும்‘ என்ற கோரிக்கையுடன் வலிகாமம் வடக்கு மக்கள் மயிலிட்டியில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரித்தொடங்கியுள்ளபோராட்டத்தின்நான்காவது நாளான நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். அவர மேலும் தெரிவித்ததாவது:

இப்போராட்டம் இந்த மக்களின் அடிப்படை உரிமையை கேட்கிறது இது தமிழர்களின் குரலாக ஒலிக்கப்படுகிறது. எமது நிலத்தை அபகரித்து வைத்திருப்பது என்பதை இன அழிப்பின் ஒரு அடையாளமாகவே பார்கவேண்டியுள்ளது. இது தனியே மனித உரிமை மிறல் மட்டுமல்ல இன அழிப்பின் செயற்பாடாக விளங்குவதாக நாங்கள் நோக்கவேண்டியுள்ளது .

இந்த இடத்து மக்கள் 1990 ஆண்டு முதல் வெளியேற்றப்பட்டனர். 2009 ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் இந்தப் பகுதியில் ☞ 2

## ‘அணையா விளக்கு’ போராட்டத்தில் இன்று மனிதச் சங்கிலி ஊர்வலம்

### ஐ.நா. அலுவலகத்தில் மனு கையளிப்பு அனைவரையும் திரண்டு வருமாறு அழைப்பு

செம்மணி மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப்பட்டுள்ள ’அணையா விளக்கு’ போராட்டத்தின் மூன்றாவதும் இறுதி நாளுமான இன்று செம்மணியிலிருந்து யாழ். நகரிலுள்ள ஐ.நா. அலுவலகம் வரையும் மனிதச் சங்கிலி ஊர்வலம் இடம்பெறவுள்ளது. இதில் அனைவரையும் திரண்டு வந்து பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் ☞ 3

### இலங்கையின் இனப்படுகொலைக்கான

## பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் சர்வதேச விசாரணைக்கு வழிசெய்க

### ஐ.நா. உராணையரிடம் சிறீதரன் எம்.பி. எழுத்து மூலம் கோரிக்கை

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசால் திட்டமிட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலைக்கும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் உள்ளகப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது இனமேலாதிக்கம் மிகுந்திருக்கும் இலங்கைத்தீவில் சாத்தியமற்றது என்பதால், பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் வகையிலான சர்வதேச விசாரணைக்கு வழிசெய்யுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ☞ 2

## அணையா விளக்குப் போராட்டத்தில் வேலன் சுவாமிகள் பேச்சால் விசனம்

### அரசியல்பேசி கறை பூசினார் எனக் குற்றச்சாட்டு

தன்னார்வ இளைஞர்களின் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘அணையா விளக்கு‘ போராட்டத்தில் நேற்றுக் காலை வேலன் சுவாமிகள் ஆற்றிய உரை அங்கிருந்தவர்களையும் தமிழ் மக்களையும் முகம் சுழிக்க வைத்தது. கட்சி மற்றும் அரசியல் பேதமற்ற அந்தப் போராட்டத்தின் நேர்மையை அது வெகுவாகப் பாதித்துக் கேள்விக்குள்ளாக்கியது என்று பலரும் குற்றஞ்சாட்டினர். ☞ 2

## தமிழ் தேசியத்திற்கு எல்லை வேலி வேண்டாம்

### ஆறு திருமுகன் வேண்டுகோள்

தமிழ் தேசியத்திற்கு எல்லை வேலி போடவேண்டாம் என்று தெரிவித்தார் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தானமும் பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றது. அதில் ஆசியுரை வழங்கியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று தேசியம், தமிழ்த் தேசியம் ஆகிய சொற்களெல்லாம் அரசியல்வாதிகளிடத்தே அடிக்கடி நடமாடுகின்றனர். ஆனால், மகாஜனாக் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பா பிள்ளை, இந்த மண்ணிலே பிறந்த நாங்கள் ஏன் சுதேசியத்தைப் பாதுகாக்கக்கூடாது, அதைப்பற்றி பேசக்கூடாது என்று அன்றே ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வெளியேதமிழ்அரசுக்கட்சியுடன்கள்ளஉறவு வைத்தார்கள். அதுகொள்கையைமீறியசெயல் அல்ல என்பதால் அது குறித்துக் கொள்கைக் குன்றுகள் அலட்டிக்கொள்ளவில்லை. போகட்டும். இப்போது மன்னாரில் எதைச் சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்டார்களோ அதற்கெதிராக தேசிய மக்கள் சக்தியோடு சேர்ந்தே ஆட்சியமைத்திருக்கிறார்கள். இனி என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். கொள்கைத் தலைவர் வெளிநாடு போய்விட்டார் என்பதால் அவர் வரும் வரைக்கும் கொள்கை குத்துக்கரணம் அடித்தபடி தத்தித் திரியும் என்று நினைக்கின்றேன். என்ன நடக்கும் என்று பார்க்கலாம்.

மன்னாரில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தி (என்பிபி) ஆதரவளித்தால் அதற்கு என்ன செய்வது என்று 'சைக்கிள்' தம்பிகள் கிளம்புவார்கள் என்பது நன்கு தெரியும். ஆனால், மாந்தை மேற்கு பிரதேச சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒருவர் தவிசாளராக வருவதற்குஎன்பிபிஆதரவளித்ததுமட்டுமல்ல, என்பிபியின்நபர்உபதவிசாளராகவருவதற்கு ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியினர் ஆதவரளித்தனர். என்பிபியை எதிர்த்து அவர்கள் தமது தரப்பு நபரை உபதவிசாளர் பதவிக்கு நிறுத்தவில்லை.

தமிழ் அரசுக் கட்சி ஆளை நிறுத்தியிருக்கலாம்தானே என்று ஒருவர் கேள்வி எழுப்பமுடியும். தவிசாளர் தெரிவில் அந்தக்கட்சிக்குசபையில்வெறும்5வாக்குகளே ஆதரவாகக்கிடைத்தநிலையிலும்ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 15 வாக்குகள் கிடைத்தநிலையிலும்தோற்கப்போகின்றோம் என்றுதெட்டத்தெளிவாகத்தெரிந்துகொண்டே தமிழ் அரசு ஏன் வேட்பாளரை நிறுத்தப் போகின்றது. அ-துவும்போக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் என்பிபியும் ஏற்கனவே 'டீல்' போட்டுவிட்டார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்த பின்னர் மீண்டும் மீண்டும் மோதி மூக்குடைபட அவர்கள் தயாராக இருக்கவில்லை என்பதும் புரிந்துகொள்ளக்கூடியதே.

இந்த விடயத்தில் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டத் தலைமையும்கூட சுத்தமானது கிடையாது. கட்சித் தலைமையின் உத்தரவு, இறுக்கமான கட்டளையையும் மீறி என்பிபியோடு சேர்ந்து அங்கு அதிகாரத்தைப் பிடிக்க முடியுமா என்ற அணுகு-முறையில், 'டீல்' அரசியலில் இறங்க அவர்களும் முன்னின்று பார்த்தார்கள். ஆனால், தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்துவதில் குறியாக இருக்கும் என்பிபி அந்த 'டீல்' பேச்சுக்களைக் குழப்பிவிட்டு தன்னை இருகரம் நீட்டி அணைத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு இணைந்துவிட்டது.

இவ்வளவிற்குப்பிறகும்'கொள்கைக்கூட்டு' இந்த விவகாரத்தை எப்படி சமயோசிதமாக, தமிழ் அரசுக் கட்சியில் பழியைப்போட்டு நியாயப்படுத்தப்போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## என்பிபி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளும்கூட அதனைப் பின்பற்றி வந்திருந்தன. ஆனால் இந்த அடிப்படைக் கோட்பாட்டுக்கு முரணாகஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணி மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைத்திருக்கின்றது. இது உள்ளூராட்சி சபைகள் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் கோட்பாட்டை முழுமையாக மீறும் செயல்.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியின் இந்த அணுகுமுறையை தமிழ் அரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களின் இந்தச்செயல்உள்ளூராட்சித்தேர்தலில்தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு முற்றிலும் முரணானது. 'கொள்கைக்கூட்டு' என்றுமுழங்கியவர்கள்இப்போதுஅடிப்படைக் கோட்பாட்டையே தகர்த்து தேசிய மக்கள் சக்தியுடன்கைகோர்த்திருப்பதுதமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல் - என்றுள்ளது.

## போர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஆலயங்களுக்கு சென்று வழிபட மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் 2013 ஆண்டு அந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டன. இது வேனையான விடயமாகும். தற்போதும்கூட முகாம் பகுதிகளுக்குள்உள்ளஆலயங்களுக்குசென்று வழிபட முடியாதுள்ளது, வாழ்விடங்களுக்கு செல்லமுடியாதுள்ளது.

தங்களது நல்ல தண்ணீர் கிணறுகளில் தண்ணீர் அள்ளி குடிக்க முடியாதவர்களாக அந்த மக்கள் அவதிப்படுகிறார்கள். இவ்வாறாக பல வேதனைகளுடன் பல மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்தும் சொந்த நிலங்களில் மக்களை வாழவிடாது ஆளும்தரப்பும் இராணுவமும் தடுத்து வருகிறார்கள் என்றால், இதனை இன அழிப்பின் மற்றோருவடிவமாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இன்றைய சூழலில் மயிலிட்டியில் செந்த நிலம் வேண்டும் என்று போராடுகிறார்கள். இன்னும் சில துரம் தள்ளி சென்றால் தையிட்டியில் சட்டவிரோதமாக இராணுவத் தினரால்கட்டப்பட்ட விகாரையை அகற்றுமாறு மக்கள் போராடுகிறார்கள்.

செம்மணியில் மனித புதைகுழிகளை சர்வதேச கண்காணிப்போடு தோண்டுமாறு கேட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது எனக்கோரியும் போராடுகிறார்கள். மற்றொரு பக்கத்தில் கைதிகளைவிடுவிக்கவேண்டும்எனகோரியும் போராட்டங்கள் நடைபெற்றுவருகிறது. இத்தகைய போராட்டங்கள் வடக்கு கிழக்கில் தான் இடம்பெற்றுவருகின்றன.

போரால் அழித்தார்கள், காணிகளை அபகரிக்கிறார்கள், போராட்டம் செய்தால் ஒடுக்குகிறார்கள். இந்தநிலை தென்னிலங்கையில் இல்லை. காரணம் தமிழ் மக்களைச் சிறுபான்மையினராகப் பார்ப்பதும் ,நாங்கள் தேசிய இனம் இல்லை என மறுப்பதுமேதான்.

மக்களின் தேவைகளோடு அவர்களின் குரலாக நாங்கள் இருக்கின்றோம் . மக்களின் கோரிக்கை நியாயமானது ,தேவையானது அவசியமானது - என்றார்.

## தமிழ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடியெடுத்துக்கொடுத்தவர். அதனாலேயே அவரது சிலையின் பெயர்ப் பலகையில் சுதேசியக் கவிஞன் என்ற பதம் பெயருடன் இணைக்கப்பட்டுள்ளது.

இன்று நாம் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசினாலும் அதைப் பேணுவதற்கு, பின்தொடர்வதற்கு எத்தனைபேர் இருக்கப் போகிறார்கள்என்றுகவலைப்படுகின்றோமா? 55ஆயிரம்குடும்பங்கள்இருந்தகாரைநகரில் தற்போது 5 ஆயிரம் குடும்பங்களே உள்ளன. மலையகத் தமிழர்கள் துன்பப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் வந்து குடியேற மறுக்கின்றனர்.

அவர்களுடன் பேசியபோது 1977ஆம் ஆண்டிலே கிளிநொச்சியிலே தமது பிள்ளைகள் போராட்டத்தில் பங்குபற்றி பலர் இறந்து விட்டார்களெனவும் இன்றும் தாம் நிர்க்கதியாக வாழ்கின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இதைவிட மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு அடிமையாக வந்து 200 வருடங்கள் கொண்டாடப்படுகின்ற இன்றைய நிலையிலும் அதற்காக ஈழத் தமிழர்களே பழி பாவத்தைச் சுமக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

10 இலட்சம் தமிழர்களை ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பியபோது யாழ்ப்பாணத்தில் தமிழர்கள்பட்டினிப்போராட்டம்நடத்தினார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள், தாங்கள் நிலங்களைத் தருகின்றோம் வாருங்கள் என மறித்தனர். ஆனால் தலைமன்னாரிலே கூடாரங்களை விரித்து விட்டு இராமானுயம் கப்பலில் அனுப்பும்போது எங்கே உங்கள் தமிழ் உணர்வு என்று இன்று கேட்கின்றனர். அவர்களுக்கு உண்மையும் வரலாறும் தெரியவில்லை. இப்படிப் பழியையும் பாவத்தையும் நாங்கள் தேடியதால் இன்று எம் இனம் வற்றிக்கொண்டு போகின்றது.

உயர்தரப் பிரிவு கற்கும் எதிர்காலச் சந்ததியிடம் இலட்சியம் பற்றி வினாவினால் ஒரு தடவை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேறு சாதகமாக அமைந்தால் பல்கலைக்கழகம்; இல்லையாயின் வெளிநாடு என்பதே இன்று வாய்ப்பாடாகக் காணப்படுகின்றது.

நிறைய மேல் வீடுகள் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருந்தாலும்மேல்வீட்டிலும் கீழ்வீட்டிலும் யாருமற்ற நிலையில் பூட்டிவிட்டு சாவியை எடுத்துச் செல்கின்றனர். இத்தகைய அவலத்திலிருந்து எமது மண்ணை மீட்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை அரசியல்வாதிகளோ சான்றோர்களோ நாளும் பொழுதும் பரப்புரை செய்யவேண்டும்.

நாங்கள் தேசியத்திற்கு எல்லை வேலி போடுவதை விட தேசியத்திற்குள் இருக்கவுள்ளோர் யார் ? அவர்களை எப்படி அதிகரிக்கலாம் ? என்பதைப்பற்றிச் சிந்தித்து அதனைச் சிந்திக்கின்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் - என்றார்.

## அணையா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 'அணையாவிளக்கு' போராட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சியே முதலில் பகிரங்கமான ஆதரவைத் தெரிவித்திருந்தது. தனது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவளிக்கவேண்டும் என்றும் அறிவித்திருந்தது. அதனடிப்படையில் தமிழ் அரசுக் கட்சியின் பிரதேசசபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கட்சித் தலைவர் சிவஞானம் தலைமையில் நேற்றுப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் நிகழ்வைத் தொடக்கி வைத்து ஆசியுரை வழங்கிய வேலன் சுவாமிகள் போராட்டத்தின் உன்னத நோக்கத்தைச் சிதைக்கும் வகையிலான அரசியல் கருத்துக்களை அங்கு தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழிக்குக் காரணமானவர்களுக்குத் துணைபோனவர்களுடன் சேர்ந்திருப்போருக்கு இந்தப் போராட்டத்தில் நீதியைக் கோரும் உரிமை இல்லை என்றார் அவர். அத்தோடு போராட்டத்தில் ஒரு நாள் வந்திருந்துபடமெடுத்துவிட்டுச்செல்பவர்களை தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து மக்கள் ஒதுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதி என்பது உலகத்தின் அடிப்படை விடயமாகஇருக்கிறது. அனைத்துசமயங்களும் ஆன்மிகமும்நீதியையேவலியுறுத்துகின்றன, அநீதிக்கு எதிராக நீதியை நிலைநீட்டுகின்ற போராட்டம் என்பது காலம்காலமாக நடைபெற்றுவந்திருக்கிறது.

யாரேல்லாம் அநீதிக்காக சுயலாபத்திற்காக உழைத்தார்களோ அந்த அநீதியை இழைத்தவர்களோடு சேர்ந்திருப்பது, கூட்டுசேர்ந்திருப்பது, ஆதரவாக நிற்பது என்பது அநீதிக்கு துணைநிற்கின்ற செயற்பாடு. அவர்களுக்கு நீதியைக் கேட்கின்ற எந்த உரிமையும் கிடையாது. அநீதிக்குத் துணைபோய்விட்டு இத்தகைய போராட்டங்களுக்கு வந்து புகைப்படம் எடுத்து படம் காட்டும் போலியானவர்களை தமிழ்தேசிய அரசியலில் இருந்து முற்றாக ஒதுக்கவேண்டும்

இது நீதிக்கான குரல் எந்த ஒரு தனிமனிதனுக்காகவோ கட்சிக்காகவோ பொது அமைப்பிற்காகவோ செல்லப்படும் விடயம் அல்ல இன்று போலித்தனங்களும் கபடதனங்களும் சுத்துமாத்துகளும் சூழ்ச்சிகளும், நரித்தனங்களும் பெருகியிருக்கத்தக்க சூழ்நிலையிலே தங்களை பெரியவர்களாக காட்டிக்கொள்ளும் அனைவரையும் மக்கள் ஒன்றுதிரண்டு ஒதுக்க வேண்டும். அதுதான் உண்மையான நீதியாக இருக்கும்.

தமிழ்மக்களுக்காக தமிழ்தேசியத்திற்காக உழைப்பவர்கள் மக்களின் கோரிக்கைகள் என்ன என்பதை உணர்ந்து அவர்களுக்காக செயல்படவேண்டும். போலித் தேசியத்திற்காக அங்கும் இங்கும் திரிந்து மக்களை ஏமாற்றவேண்டாம். 'அணையா விளக்கு' போராட்டத்தில் ஏனைய தமிழ் தேசத்து மக்கள் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை வலுச்சேர்க்க வேண்டும் என்றார்.

இரண்டு நாள்களாகத் தொடர்ந்த போராட்டத்தில் முதல் நாள் போராட்டம் தொடங்கியபோது அரசியல்வாதிகளான தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த மணிவண்ணன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன், ரெலோ இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் நிரோஸ், தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். நேற்று அவர்களில் யாரும் பங்கேற்றிருக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியினரே நேற்றைய தினம் பெரும் எண்ணிக்கையில் போராட்ட இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அப்படியிருக்கும்போது தமிழ் அரசுக் கட்சியினரை வைத்துக்கொண்டு வேலன் சுவாமிகள் அப்படிப் பேசியது, போராட்டத்திற்கே கறையை ஏற்படுத்தியிருப்பதாக பலரும் விசனம் தெரிவித்தனர். மக்கள் நலன் கருதிய போராட்டங்களில் இவரைப் போன்றவர்களே பிளவுகளையும், பிரிவுகளையும் ஏற்படுத்தி அவற்றை பின்னடைவுக்குள்ளாக்குகின்றனர் என்று அவர்கள் வேதனைப்பட்டனர்.

வேலன் சுவாமிகளின் கருத்துக்குப் பதிலளிக்க தாம் வாய்ப்புத் தருவதாக ஏற்பாட்டாளர்கள்தமிழ்அரசுக்கட்சியின்தலைவர் சிவஞானத்திடம் கேட்டபோது, அப்படித் தான் பதிலளிப்பது போராட்டத்தின் நோக்கத்தைச் சிதைத்து அதனை பலவீனப்படுத்திவிடும் என்றுகூறி உரையாற்ற மறுத்துவிட்டார் என்று அறியமுடிந்தது.

## பொறுப்புக்கூறலை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடனான சந்திப்பின்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், திருமலை மாவட்ட ஆயர் வண. நோயல் இம்மனுவல், வணபிதா ஆம்ஸ்ரோங், சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்டோரின் கையொப்பங்களுடன் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கும் 2021.01.15 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் சுட்டிக்காட்டிய விடயங்களை மேற்கோள் காட்டி தனது கோரிக்கையை எழுத்துமூல கோரிக்கையாக ஆணையாளரிடம் நேரில் கையளித்தார் சிறீதரன்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, அடுத்தடுத்து ஆட்சிபீடம் ஏறிய அனைத்து ஆளும்தரப்புகளும் சிங்கள-பௌத்த பெரும்பான்மைவாதத்தை நிறுவனமயமாக்கி, ஈழத் தமிழர்களின் அடையாளத்துவவாழ்வைசிதைத்து, சுயாட்சி மற்றும்பிராந்திய ஒருமைப்பாட்டை அடியோடு இல்லாமற் செய்தன. இதற்காக நீண்டகாலம் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதியானஜனநாயகஎதிர்ப்புபோராட்டங்கள் கொடூரமாக அடக்கப்பட்ட பின்னர், ஆயுத மோதல் ஏற்பட்டிருந்ததடன், அதன் உச்சமாக 2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை என்ற இனப் பேரவலம் நிகழ்ந்திருந்தது.

போருக்குப் பின்னரும் தமிழர் தாயகப் பகுதிகள் பெரிதும் இராணுவமயமாக்கப்பட்டு, நில அபகரிப்புகள், மக்கள்தொகை மறுசீரமைப்பு, பொருளாதார புறக்கணிப்பு மற்றும் கலாசார அழிப்பு என்பவை தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கான ஆயுதங்களாக அரசாலும், அரச படைகளாலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. தற்போதைய ஆட்சியின் கீழும், இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிறுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ புதிய அரசாங்கம் எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

மனித உரிமைகள் பேரவையின் 30/1 (2015) மற்றும் 46/1 (2021) தீர்மானங்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான தீர்மானங்களை ஏற்றுக்கொண்டாலும், அவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும், செய்யப்பட்ட குற்றங்களின் வீரியத்தையும் ஈடுசெய்யத்தக்கவையல்ல என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். அதேவேளை இலங்கை அரசு நுக்ஷிளீக்ஷியூன் நுறீஸிபுஊண திட்டத்தை தடையின்றி அணுகுவதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிப்பதற்கான சர்வதேச முயற்சிகளையும் தடுக்கிறது.

இத்தகைய உள்ளக அரசியல் நிலைமாறுதல்களை கடந்து, ஐ.நா மனித உரிமைகள்பேரவையானதுதீர்மானங்களுக்கு அப்பால் நகர்ந்து, தமிழினப் படுகொலை விவகாரத்தை ஐ.நா பொதுச் சபைக்கும், ஐ.நா பாதுகாப்பு பேரவைக்கும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கொண்டு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

## மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும் தெளிவான குறிக்கோளுடன் கூடிய சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை செயற்படுத்த வேண்டுமென தங்களை தயவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீதிக்கான பாதைகளை திறப்பதில் ஏற்படும் தாமதம், இலங்கை அரசுக்கும் தமிழினப் படுகொலையாளிகளுக்கும் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான தைரியத்தை அதிகரிக்கும் சமநேரத்தில்; ஈழத் தமிழர்கள் தங்கள் தாயகத்தில் ஒரு தேசமாக அழிக்கப்படுவதையும் துரிதப்படுத்தும் என்ற அடிப்படையில் நீதி, உண்மைமற்றும்பொறுப்புக்கூறல்என்பவை தாமதிக்கப்படாதிருப்பதை தங்கள் கொள்கை ரீதியான தலைமைத்துவம் உறுதிசெய்ய வேண்டும் - என்றுள்ளது.

## கைகளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சனிக்கிழமை மயிலிட்டி சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்போராட்டத்தில்நேற்றும் 500இற்கும்மேற்பட்ட மக்கள்கலந்துகொண்டு உணவு சமைத்து அவ்விடத்தை விட்டு நகராமல் அமைதி வழியில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் மயிலிட்டி, பலாலி, அன்ரனிபுரம், காங்கேசன்துறை உள்ளிட்டவர்களும் கத்தோலிக்க மத குருமார்களும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் பொது அமைப்புகள் உட்பட மலையகமக்கள்சார்பொதுஅமைப்புக்களைச் சேர்ந்த சிலரும் பங்கேற்றிருந்தனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து போன மக்கள் யுத்தம் நிறைவடைந்து தமது காணிகளுக்கு வந்த பின்னரும் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் காணிகளை விடுவிப்பதாக கூறி சிறு சிறு இடங்களை மாத்திரம் விடுவித்துள்ளன.

ஆனால்மக்களின்காணிகள்முழுமையாக விடுவிக்கப்படவில்லை இதனால் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் இன்றுவரையும் காணி சொந்தக்காரர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக காணிகள் வைத்திருப்பதாக கூறுகின்ற இராணுவம் தற்போது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலைஉருவாகியநிலையிலும்அவர்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் வைத்திருப்பது மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே வாழும் நிலைக்கு உட்படுத்துவதாகவே தாம் உணர்வதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எனவே தமிழ் மக்கள் மத்தியில் அதிக அக்கறை கொண்டுள்ளோம் எனக் கூறுகிற புதிய அரசாங்கம் குறித்த போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

## ‘அணையா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வுகளின் ஏற்பாடுகள் தொடர்பில் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்ததாவது:

‘அணையா விளக்கு‘ போராட்டம் திங்கட்கிழமை முற்பகல் 10.10 மணிக்கு சுடரேற்றலுடன் செம்மணியில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு அரசியல்தரப்பினர், பொது அமைப்புகள், பல்கலை மாணவர்கள், வர்த்தகர்கள்எனபலதரப்பட்டவர்களதும்ஆதரவு அதிகளவில் கிடைத்ததால் நாம் எதிர்பார்த்த இலக்கை போராட்டம் எட்டியுள்ளது.

போராட்டத்தின் இறுதி நாளான புதன்கிழமையும் முற்பகல் 10.10 இக்கு அகவணக்கம், மலரஞ்சலி செலுத்தல் என்பவற்றுடன் வழமையான நிகழ்வு தொடங்கும். மதியம் 12 மணிக்கு புதைகுழி இருக்கும் சிந்துபாத்தி மயானத்தில் இருந்து ஊர்வலம் தொடங்கும். செம்மணி வீதி வழியாக ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம்வரை ஊர்வலம் செல்லும். அங்கு போராட்டக்காரர்களால் மனு ஒன்று கையளிக்கப்படும்.

இதேநேரம் குதித்த ஊர்வலம் செல்லும் வழியில் தியாகி திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றி அக அஞ்சலி செலுத்தப்படும். அதேபோன்று தமிழாராய்ச்சி நினைவிடம், யாழ் நூலகம், படுகொலை செய்யப்பட்ட் ஊடகவியலாளர் நினைவுச் சதுக்கம் ஆகிய இடங்களிலும்சுடர்ஏற்றப்படும். அதன்பின்னர் குறித்த ‘அணையா விளக்கு‘ காற்றுடனும் நீருடனும் கலக்கப்படவுள்ளது.

நாளை முன்னெடுக்கப்படவுள்ள ஊர்வலமானது மனிதச் சங்கிலி முறையில் எவருக்கும் இடையூறுகள் ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்படவுள்ளதால் அனைத்துத் தரப்பினரும் அதற்குத் தமது ஆதரவை வழங்கி வலுப்படுத்துமாறும் கோருகின்றோம் - என்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அழுத்தத்தை உணருமா அரசு?

வடக்கில் காணிகள், குறிப்பாக தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்கள், கடந்த பல ஆண்டுகளாக படிப்படியாக அரசுக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் கீழ் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இன்றும் இது தொடரும் நிலையில், மக்கள் நிலங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சிங்களமய அரசமைப்பின் பின்னணியில் அமைந்துள்ள நில அபகரிப்புகள், ஒரு இனவாத நடவடிக்கையாகவே பலர் கருதுகின்றனர்.

அண்மையில், யாழ்ப்பாணம் செம்மணி மற்றும் சிந்துப்பாத்தி பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகள் பல ஆண்டுகளாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தன. இதன் மூலம், நில அபகரிப்புகள் சமூக நீதி, மனித உரிமைகள் மற்றும் இன உரிமைகளுடன் எவ்வாறு பிணைந்துள்ளன என்பதை உலகம் உணர ஆரம்பித்துள்ளது. இதனிடையே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் இலங்கை வருகை தந்துள்ளார். இது, வடக்குக்கேற்படும் சர்வதேசக் கவனத்தை மேலும் தீவிரமாக்கியுள்ளது.

இலங்கை அரசு, வரலாற்றுச் சுமைகளை மறைக்க முடியாது. மாறாக, அவற்றை நேர்மையாக எதிர்கொண்டு நீதிக்கான பாதையை அமைக்க வேண்டும். ஆனால், நில அபகரிப்புகள் தொடரும் சூழலில், சர்வதேச சமுதாயத்தின் நம்பிக்கையைப் பெறமுடியாது. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசு முறையாக நடைமுறைப்படுத்தவில்லையென்ற குற்றச்சாட்டுகள், இதனை மேலும் மோசமாக்குகின்றன.

சர்வதேச பார்வை என்பது வெறும் விமர்சனம் அல்ல; அது வருங்கால உதவிகளை, பொருளாதார ஒத்துழைப்புகளை, மற்றும் வர்த்தக உறவுகளைப் பெரிதும் பாதிக்கக்கூடியது. நிலங்களை மீட்கக்கோரும் மக்கள் போராட்டங்கள் இனிமேல் உள்ளடக்கமாகவும், சட்டரீதியாகவும், சத்தியத்தின் அடிப்படையிலும் விசாரணை செய்யப்பட வேண்டிய காலக்கட்டத்தில் நாமிருக்கின்றோம்.

அரசு இந்த அழுத்தங்களை உணர வேண்டும். தண்டிப்பதற்கு முன் நியாயத்தை நிலைநாட்ட வேண்டும். சட்டவிரோதமாக இராணுவம், பௌத்த அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட நிலங்களை உரிமையாளர்களுக்கு திருப்பி அளிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

இன்று உலகம் தமிழரின் நிலக்கழிப்பைப் பார்த்துக்கொண்டு இருக்கிறது. நாளை, அதற்குப் பதிலாக நடவடிக்கை எடுக்கத்தான் ஆரம்பிக்கும். இதற்குள், இலங்கை அரசு தன்னை சர்வதேச நீதியின் கோட்பாடுகளுக்கேற்ப சீரமைக்க வேண்டிய தருணம் இது. நியாயத்தை நிலைநாட்டும் ஆளும் தரப்பு மட்டுமே நீடித்த அமைதிக்கு வழிகாட்டியாக அமைய முடியும்.

# போலி பாஸ்போட், போலி அ.அட்டையுடன் மாநகரசபை முன்னாள் மேயர் மகன் கைது

போலி பாஸ்போர்ட் வைத்திருந்ததற்காக தெஹிவளை – கல்கிசை நகரசபையின் முன்னாள் மேயர் ஒருவரின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிசை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் போலி பாஸ்போர்ட் மற்றும் போலி அடையாள அட்டையுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொழிலதிபர் போலி பாஸ்போர்ட் வைத்திருக்கிறார் என்று கல்கிசை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு தகவல் கிடைத்தது. வாக்குமூலம் பதிவு செய்ய அவர் கல்கிசை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டார். வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்போது, அவர் போலி பாஸ்போர்ட்டை உருவாக்கி 2014 முதல் 2019 வரை கொரியாவுக்குச் சென்றது தெரியவந்தது என்று மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெஹிவளை பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் முன்னாள் தொடர்புச் செயலாளர் ஒருவர் தனது சகோதரியின் பிறந்த ஆண்டைப் பயன்படுத்தி போலி தேசிய அடையாள அட்டையை உருவாக்கி, அதனடிப்படையில் பாஸ்போர்ட்டை உருவாக்கி, அவருக்குக் கொடுத்தார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 39 வயதுடையவர்.

# அனைத்து மனிதப் புதைகுழிகளையும் சர்வதேச கண்காணிப்புடன் விசாரிக்குக

## யாழ். மாவட்ட சர்வமத பேரவை அறிக்கை

அனைத்து மனித புதைகுழிகளும் சர்வதேச கண்காணிப்புடன் தோண்டப்பட்டு விசாரணை செய்யப்படவேண்டும். அந்தப் படுகுழிகளை உருவாக்கிய உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தவேண்டும் என யாழ். மாவட்ட சர்வமத பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்ட சர்வமத பேரவையாக, செம்மணி மனித புதைகுழி அகழ்வாராய்ச்சி மூலம் வெளிப்பட்டுள்ள பேரவலம் எங்களை அதிர்ச்சிக்குட்படுத்தியுள்ளது என்பதைக் குறிப்பிட்டு எமது கண்டனத்தைத் தெரிவிக்கிறோம்.

மனித வாழ்க்கை எமது சமய விழுமியங்களின்படி, மாண்புமிக்கது. அதனை மதிப்புடன் நோக்குவதும் அறம் மைய ஆன்மிகத்துடன் வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை, இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து சமயம் மற்றும் பௌத்தம் தெளிவாக விளக்கியுள்ளது.

அன்புடனும் நல்லெண்ணத்துடனும் வாழ வேண்டிய நாம், எம்மவரது எலும்புகளை செம்மணி உட்பட பல இடங்களிலும், மனித புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கிறோம் என்பது மிக மிக வேதனைக்குரியது.

இது கடவுளுக்கு எதிரான, சமய விழுமியங்களுக்கு எதிரான கொடுமையான செயல். இந்தக் கொடுமையுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் நீதியின் முன் கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றின் 46/1 தீர்மானத்தின்படி, இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைக் காலம் தாழ்த்தாமல், விரைவாகச் சேகரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

'காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இந்த புதைகுழிகளுக்குள் எமது உறவுகள் உள்ளனரா?' எனும் கேள்வியை எழுப்புவதை சர்வதேச சமூகம், இலங்கையில் வாழ்வோர் அனைவரும் தெளிவாக செவிமடுத்து, அவர்களுக்கு நீதி கிடைக்க முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அனைத்து மனித புதைகுழிகளிலும் சர்வதேச கண்காணிப்புடன் அகழ்வாராய்ச்சி மிக வேகமாக நடைபெறவேண்டும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என நாம் முன்மொழிகிறோம்.

நீதி இல்லாமல் அமைதி இலங்கையில் மட்டுமல்ல எங்கும் சாத்தியமில்லை என்பதை இலங்கைக்கும், உலகிற்கும் வலியுறுத்த விரும்புகிறோம். இனம், சமயம், மொழி, நிறம்... எனும் அனைத்து வரையறைகளையும் கடந்து, இலங்கை உட்பட உலகெங்கும் பாதிக்கப்பட்டவர்கள் நிம்மதியாக வாழவும், எதிர்கால நம்பிக்கையை இன்று விதைக்கவும், கேவலமான மனித அழிப்பிலே ஈடுபட்டவர்களுடைய மனமாற்றம் தேவை என்பதை சமய விழுமியங்களின்படி வலியுறுத்துகிறோம் என்றுள்ளது.

# பெரிய நீலாவணை கொலை: இரட்டைச் சகோதரிகள் கைது

மே மாத இறுதியில் பெரிய நீலாவணையில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரட்டைச் சகோதரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஷ்ணு கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 38 வயது மதிக்கத்தக்க இரண்டு பிள்ளைகளின் தாயாரான விதுஷா மே 30 படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அவரது கழுத்து பகுதியில் காயங்கள் ஏற்படக்கூடிய வகையில் வெட்டப்பட்டும் தாக்கப்பட்டும் அவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

24 நாட்களின் பின்னர் இந்தப் படுகொலை தொடர்பில் 34 வயதுடைய இரட்டைச் சகோதரிகளைக் கைது செய்துள்ளனர். ஸ

இப்படுகொலை இடம்பெற்ற வேளை கொல்லப்பட்டவரின் கணவர் வெளிநாடு ஒன்றில் தொழில் நிமிர்த்தம் தங்கி இருந்தார் என்றும் சம்பவம் நடைபெற்ற வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கமராவின் காணொளிகளை சேமிக்கும் கருவி (ரூட்டர்) காணாமற்போயிருந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir


# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# JRIDE

இலங்கையின் பயணிகள் செயலி

SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA






இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2025இல் வெளியிடப்பெற்றது